

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 16.10.2025 | 42. நம் சமாதானத்திற்கு ஆதாரம், கிறிஸ்துவே! |
|---|---|



**ந**ம்முடைய ஆத்துமா சங்கீதக்காரனோடு சேர்ந்து மகிழ்ந்து: “எனக்கு விரோதமாய் ஒரு பாளையமிறங்கினாலும், அது என்னை அணுகாது! என்மீது ஒரு யுத்தம் எழும்பினாலும், அவரில் நான் நம்பிக்கையாயிருப்பேன்” எனக் கூறும் உன்னத அறிக்கையேயாகும்! (சங்.27:3).

இவ்வித அனுபவத்தைப் பெற்ற ஒருவனுடைய ஆத்துமா ‘எப்பக்கத்திலிருந்து தாக்கப்பட்டாலும்’ தொடர்ந்து ஒரு கற்பாறையில் நிலைநிற்பது போலவே இருக்கும்! சுய சித்தம் அல்லது சொந்த விருப்பத்திற்கு இடம் இல்லை என்ற நிலைக்கு வந்தவன், தேவன் கட்டளையிடுகின்ற யாதொன்றிற்கும் கீழ்ப்படிவான்! அது, உயர்வோ அல்லது தாழ்வோ, பெரிதோ அல்லது சிறிதோ, சுவையானதோ அல்லது கசப்பானதோ, கனத்திற்குரியதோ அல்லது கனவீனத்திற்குரியதோ, ஜீவனாகிலும் அல்லது யாதொரு கேடான அசம்பாவிதமானாலும், அவனுடைய ஆத்துமாவில் தங்கியிருக்கும் சமாதானத்தை அசைத்து விட முடியாது! ஜீவகாலமெல்லாம் நம்மோடு உறவாடி வந்த ‘நம் சொந்த ஆத்துமா’ எளிதில் வஞ்சனைக்கு உட்பட்டுவிட முடியும். நாம் பெற்ற சமாதானத்திற்குள் ‘நம் சுய நல விருப்பம்’ ஒரு கிருமியைப் போல் ஊடுருவிச் சென்றிட முடியும் என்பதை உணர்ந்து, நம் ஆத்துமாவின் சமாதானத்தை, பரிசுத்த ஆவியின் பெலத்தைக் கொண்டு விழிப்புடன் காத்துக்கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பாகவே இருக்கிறது! அது ‘ஓ வென்று பாய்ந்திடும்’ நீர் வீழ்ச்சியின் அருகில் ‘தன் குஞ்சுகளோடு’ மகிழ்வுடன் வாழும் பறவை கூட்டைப்போலாகும்!

**– ரத்னம்**